சுருக்கம்

நிர்வாகம் – தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை – பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கான குடும்ப ஓய்வூதிய திட்டம் – மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.4,750/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்: 164 நாள்: 21.09.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048

ஹேவிளம்பி வருடம் புரட்டாசி மாதம் – 5ம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை.(நிலை) எண்.202, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள்.14.09.1998.
2. அரசாணை (நிலை) எண்.239, செய்தி மற்றும் சுற்றுலா (நிர்.4)த் துறை, நாள் 04.10.2006.
3. அரசாணை (நிலை) எண்.302, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 22.07.2010.
4. அரசாணை (நிலை) எண்.192, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் .14.09.2011.
5. அரசாணை (நிலை) எண்.247, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள்07.10.2013.
6. அரசாணை (நிலை) எண்:3, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள்: 11 .01.2016.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் நலிவுற்ற நிலையிலுள்ள ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்களின் குடும்ப நலன் கருதி, அரசு உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவரது துணைவியார் உயிரோடிருந்து அரசு ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்தால் அவரது கணவர் பெற்று வந்த மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூ.1,000/–லிருந்து 50 சதவீதமான, அதாவது ரூ.500/– மட்டும் அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.1,500/–லிருந்து 2,000/– ஆக உயர்த்தியும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.2,000/–லிருந்து ரூ.2,500/–ஆக உயர்த்தியும், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைப்படி, ரூ.2,500/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தியும், ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைப்படி பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.3,000/–லிருந்து ரூ.4,500/– ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா.,